| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.ம.கோவிந்த ராவ், இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சியர்,<br>தஞ்சாவூர் | 1) முதல்வர்,<br>அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ,<br>தஞ்சாவூர்.<br>2) இணை இயக்குநர்,<br>மருத்துவப்பணிகள், தஞ்சாவூர்<br>3) துணை இயக்குநர்,<br>சுகாதாரப்பணிகள், தஞ்சாவூர்.<br>4) ஆணையாளர், தஞ்சாவூர் மாநகராட்சி<br>5) மண்டல இயக்குநர் (நகராட்சி நிர்வாகம்)<br>தஞ்சாவூர்.<br>6) உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), தஞ்சாவூா<br>7) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), தஞ்சாவூர். |

ந.க.9199/2020/பே.மே.1/நாள்.03.06.2021

அய்யா / அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள் : | பேரிடர் மேலாண்மை - தஞ்சாவூர் மாவட்டம் - COVID-19 - கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகள் - கொரோனா நோய்த்தொற்றினால் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்திட மோக்ஷா துவாரா டிரஸ்ட் என்ற அமைப்பு முன் வந்துள்ளது - தொடர்பாக. |
| பார்வை: | 1. மோக்ஷா துவாரா டிரஸ்ட் என்ற அமைப்பின் கட்செவி நாள் 30.05.2021<br>2. மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரை, நாள்.31.05.2021 |

கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பரவலிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வண்ணம் தமிழக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக கொரோனா நோய்த்தொற்றினால் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்திட இறந்த நபரின் சொந்த பகுதிக்கு இறந்தவரின் உடலை கொண்டு செல்வதற்கு அரசு இலவச அமரர் ஊர்திகள் ஈடுபட்டு வருகின்றது.

ஒரே நேரத்தில் அதிக இறப்புகள் ஏற்படும் சமயங்களில் இறந்தவரின் உடல்களை கொண்டு செல்ல அரசு இலவச அமரர் ஊர்திகளின் சேவை போதாத நிலையில் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பணம் செலுத்தி கொண்டு செல்லும் நிலைக்கு இறந்தவரின் குடும்பத்தினர் ஆளாகின்றனர்.

சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அரசு வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படியும், விரைந்தும், சேவை மனப்பான்மையுடன் எவ்வித கட்டணமின்றி மோக்ஷா துவாரா டிரஸ்ட்(9789888713) என்ற தனியார் தொண்டு நிறுவனம் நல்லடக்கம் செய்வதற்காக இறந்தவர்களின் உடல்களை சம்பந்தப்பட்ட மின்மயானத்திற்கோ /

இடுகாட்டிற்கோ கொண்டு செல்வதற்காக தனது சொந்த செலவில் போக்குவரத்து வசதியினை செய்து வருகின்றது.

மேற்கண்ட மோக்ஷா துவாரா டிரஸ்ட் என்ற தொண்டு நிறுவனம் தஞ்சாவூர் மாவட்டத்திலும் கொரோனா நோய்த்தொற்றினால் உயிரிழந்த ஏழை எளிய மக்களின் உடல்களை எவ்வித கட்டணமின்றி நல்லடக்கம் செய்யுமிடத்திற்கு தனது சொந்த பொறுப்பில் கொண்டு செல்லும் பணியினை மேற்கொள்ள முன்வந்துள்ளது.

எனவே, தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், நகர்ப்புற சுகாதார நிலையங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், கோவிட் சிறப்பு சிகிச்சை மையங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் ஆகியவற்றில் கொரோனா நோய்த்தொற்றினால் இறந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்வதற்காக, அரசு வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படியும், விரைந்தும், சேவை மனப்பான்மையுடன் எவ்வித கட்டணமின்றி சம்பந்தப்பட்ட மின்மயானத்திற்கோ / இடுகாட்டிற்கோ கொண்டு செல்வதற்காக தனது சொந்த செலவில் போக்குவரத்து வசதியினை செய்து தரும் மோக்ஷா துவாரா டிரஸ்ட்(9789888713) என்ற தனியார் தொண்டு நிறுவனத்தின் சேவையினை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒம்/-ம.கோவிந்த ராவ்,
மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

/ஆணைப்படி/

3/6/2021

மாவட்ட ஆட்சியருக்காக,
தஞ்சாவூர்.

03/06/2021

நகல்

1. சார் ஆட்சியர், பட்டுக்கோட்டை
2.வருவாய் கோட்டாட்சியர், தஞ்சாவூர் / கும்பகோணம்
3. அனைத்து வட்டாட்சியர்கள், தஞ்சாவூர் மாவட்டம்
4. மோக்ஷா துவாரா டிரஸ்ட், 5/137பி, VS நகர், தங்கம் அவென்யூ அனக்ஸ், சிக்கராயபுரம், கோவூர் EB, சென்னை - 28

9789888713, 9789888714

MOKSHA DWARA

ஜீவாத்ம கைங்கர்யம் (Regd.No.14672/2020)

No.5/137B, V.S.Nagar, Thangam Avenue Annexe, Sikkarayapuram, Chennai-600 128.

INCOME TAX REG No.
CIT (EXEMPTION) CHENNAI / 12AA / 2020-21 / A /11551
ORDER No.
ITBA / EXM / S / 12AA / 2020-21 / 1031890852 (1) DATE: 29.03.2021

அபர கைங்கர்யம்

## TO WHOMSOEVER CONCERN

Mokshadwara's objective is to service to departed souls of those who are homeless and unaffordable. It gives the importance to last rites needed for all human beings.

In current situation Mokshadwara swiftly acted for all COVID related deaths arranging ambulance,other related materials free of cost for unaffordable, poor families irrespective of caste / creed / religion when they don't get any support from any one.

Mokshadwara continue to support, arranging freezer box,crematorium booking, ritual van and last rites to all unaffordable families and homeless.

We invite all of you to visit www.mokshadwara.com to view the testimonials posted which is provided by us for your reference.

We request you to support the trust who genuinely support the departed soul and their families.